# தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (13.07.2016 முதல் 17.07.2016)

**அறிக்கைஎண் :055/2016** **தேதி:12.07.2016**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 28°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 15°செ முதல் 19°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை:** திருப்பூர் **(13.07.2016 முதல் 17.07.2016)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். 14 முதல் 17 தேதி வரை இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 29 °செ முதல் 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21°செ முதல் 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 72 முதல் 90 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 58 முதல் 85 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 21 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13.07.2016 | 0 | 32 | 23 | 6 | 72 | 58 | 21 | தென் மேற்கு |
| 14.07.2016 | 2 | 32 | 23 | 6 | 75 | 64 | 21 | தென் மேற்கு |
| 15.07.2016 | 4 | 32 | 23 | 6 | 79 | 68 | 21 | தென் மேற்கு |
| 16.07.2016 | 15 | 30 | 22 | 7 | 85 | 75 | 21 | தென் மேற்கு |
| 17.07.2016 | 35 | 29 | 21 | 7 | 90 | 85 | 21 | தென் மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ பெறப்படும் மழையை பயன்படுத்தி 60 நாட்கள் வயதுடைய மஞ்சளுக்கு 25 கிலோ தழைச்சத்து மற்றும் 18 கிலோ சாம்பல் சத்து மேலுரமாக இடவும்.
- ✓ கார் பருவ நெல் நடவு தூர் பிடிக்கும் தருணத்தில் இருப்பதால் 30 கிலோ தழைச்சத்து மற்றும் 10 கிலோ சாம்பல் சத்து இடவும். அதன் பிறகு தண்ணீரை வடிக்க வேண்டாம். இதனை ஜீலை 16 தேதிக்குள் முடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.
- ✓ தற்போது நிலவும் வானிலை காரணமாக கார் பருவ நெற்பயிரில் பச்சை தத்து பூச்சியின் தாக்கம் எதிர்பார்க்கப்படுகிறது. இதனை கண்காணித்து ப்பென்தையான் (Fenthion) 100 EC 500 மில்லி ஒரு எக்டருக்கு தெளிக்கவும்.
- ✓ ஓணம் பண்டிகைக்காக சாகுபடி செய்யப்பட்ட வாழை மரங்கள் அதிக காற்று மற்றும் மழையினால் பாதிக்கப்படாமல் இருக்க முட்டு கொடுக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ தற்போது நிலவும் வானிலை காரணமாக கார் பருவ நெற்பயிரில் பச்சை தத்து பூச்சியின் தாக்கம் எதிர்பார்க்கப்படுகிறது. இதனை கண்கானித்து ப்பென்தையான் (Fenthion) 100 EC 500 மில்லி ஒரு எக்டருக்கு தெளிக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.